# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

- கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

## வாழ்க்கை வரலாறு (18)

*விரல்கள் தாளம் போடும் விழிகள் நடமாடும்*
*சுருதி குருதியோடு சுவைகலந்து பேசும்*

**- அரியாலையூர் வே. ஐயாத்துரை**

### 2ஆம் பகுதி

**வை**ரமுத்து சில சமயங்களில் 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தில் எமனாக நடிப்பதுண்டு. பொதுவாக எமனை ஒரு அச்சம் தரும் பாத்திரமாகவே பலரும் மேடையிற், சித்திரிப்பதைக் கண்டுள்ளோம். ஆனால், வைரமுத்து எமனை வீரம், நீதி, கருணை என்பன நிறைந்த பாத்திரமாகக் காட்சியளிக்க வைப்பது வழக்கம்.

வலிமையும் வீரமும் உறுதியும் மிக்கவன் எமன். அவன் தாராண்மைக் குணமும் படைத்தவன். இதனை வைரமுத்து மிகவும் அழகாகச் சித்திரிப்பார்.

'அடாணா' ராகத்திலமைந்த பின்வரும் பாடலை வைரமுத்து பாடும் பொழுது வீர ரஸம் கொப்புளிக்கும்.

**''விண்டலமும் மண்டலமும் எண்டிசையடங்கலும்**
**விளங்கு நீதி மார்க்கமெடுப்பேன் - நல்ல**
**வேத விதிப்படி தானே நடப்போரை**
**மேலுலகம் விடுப்பேன்''**

மேற்படி வரிகளைப் பாடும்பொழுது கண்களில் கனிவு, குரோதமின்மை, குரலில் ஒரு மிடுக்கு, (அது நீதியால் வந்த மிடுக்கு) என்பன தோன்ற நடிப்பார். அடுத்து,

**''நெறிவிட்ட துஷ்டர்களைக்**
**கட்டிவந்து நரகத்தினில் விடுப்பேன்**
**உயிர் வேதனை மிகவும் கொடுப்பேன்''**

எனும் வரிகளைப் பாடும்போது வீரம் கொப்புளிக்கக் காணலாம். ''இவற்றை நான் எவ்வித சிரமமுன்றிச் செய்வேன். எனைத் தடுப்பவர் யாரும் இல்லை'' எனும் தன் முனைப்புடன் ஆனால் ஆணவமின்றிக் காட்சி தரும் ஒருவனாக எமனைக் காண வைப்பார் வைரமுத்து.

**''இன்னும் மேலும் மேலும் பாவிகளைக்**
**காணக் கோபமாக வெவ்வேறு**
**ஆய்க்கினைகள் செய்யத் தொடுப்பேன்''**

எனும் வரிகளை அழுத்திப் பாடி ஒரு முத்தாய்ப்பு வைத்தபின் வைரமுத்து தோன்றும் காட்சி ஒரு வீரனை நினைவுபடுத்தும். இங்கே எமன் தருமராஜனாகக் காட்சியளிப்பானேயொழிய தண்டராஜனாகக் காட்சியளிப்பதில்லை.

### 6. பயானகம்

பயானக ரஸம் (பயம்) வெளிப்படும் வகையில் வைரமுத்து சத்தியவான் சாவித்தரி நாடகத்தில் நடிக்குமிடம் மிகவும் சிறப்பானது, எமன் சத்தியவானுக்கு மட்டும் தெரியும் வகையில் தோன்றித் தன்னுடன் எமலோகத்திற்கு வரும்படி அழைப்பான். அதனால் பீதியடைந்த சத்தியவான் மனைவியை இறுகப் பற்றியபடி:

**''வாரான் ஒருவன் மானே - அதோ**
**வாரான் ஒருவன் மானே - அவன்**
**வாவென் றழைக்கிறானே - என்னை**
**வாவென்றழைக்கிறானே!**

**கன்னங் கரியநிறம் - அவன்**
**கண்களோ சிவப்பு நிறம்**
**பார்க்கப் பயங்கரமே - மிகப்**
**பதறுதே நெஞ்சம் ஐயோ!''**

புன்னாகவராளியில் அமைந்த இப்பாடலைப் பாடும்போது வைரமுத்துவின் முகம் மாற்றமடைந்து கொண்டு வருவதை அவதானிக்கலாம். தேகம் நடுங்குவதையும், மயக்கமுறுவதையும், சொற்கள் தடுமாறுவதையும், அவருடைய நடிப்பிற் காணும்போது பார்ப்போரும் அச்சமடையும் நிலைக்கிட்டுச் செல்லப்படுவர்.

### 7. பீபத்ஸம் (அருவருப்பு)

வைரமுத்து அருவருப்பை வெளிப்படுத்தி நடிக்கும் இடங்கள் இரண்டேயிரண்டு நாடகங்களில் மட்டும் உண்டு. முதலாவது நாடகம் நல்லதங்காள் மற்றையது பூதத்தம்பி. நல்லதங்காள் நாடகத்தில் நல்லதங்கையின் அண்ணனாக-நல்லண்ணனாக நடிக்கும் இவர் ஏழு பிள்ளைகளுடன் தன்னுடைய தங்கை கிணற்றில் விழுந்து மடிந்து விட்டதைக் கண்டதும், இதற்குத் தன்னுடைய மனைவிதான் காரணம் என்றறிந்ததும் அவளைப் பார்க்கவே அருவருப்புப்படும் நிலையைச் சித்திரிக்கும் காட்சி வெகு சிறப்பாகவிருக்கும். வெறுப்போடு முகத்தைச் சுளித்தபடி 'அடாணா' ராகத்தில் பின்வரும் பாடலைப் பாடுவார்.

ராகம் : அடாணா தாளம் : ஆதி

*பல்லவி*

அடிபோடி குடிகேடி நிர்மூடி
பழிதேடி வைத்தவளே (போடி)

*அனுபல்லவி*

படியிலென் தங்கைக்குப் பங்கம் விளைந்திட்ட
பாதகியே கொடுங் காதகியே (போடி)

*சரணம்*

மூதேவி மூளியை மொட்டையடித்து
முகத்திலே செகப்புக் கறுப்புமிட்டு
மூதேவி வாகன மீதினிலேற்றி
முச்சந்தி வீதியி லக்ஷணங்காட்டி (போடி)

இப்பாடலைப் பாடியபடி மூளியலங்காரியின் தலை மயிரைப் பிடித்து அலைக்கழிப்பதும், காறியுமிழ்வதும், அசைவுகளால் அருவருப்பை வெளிக்காட்டுவதுமாக அற்புதமாக இவர் நடிப்பார்.

## 8. அற்புதம்

அற்புத ரஸம் வெளிப்படும் வகையில் வைர முத்து நடிக்கும் பாத்திரம் 'நந்தனார்' ஆகும். தில்லைக் கூத்தனின் திருநடனத்தைக் கண்டு, தன்னை மறந்தவராக, அதிசயித்தபடி ஆடிப்பாடும் காட்சி உண்மையில் அற்புதமானதுதான். 'மாயாமாளவகௌள' ராகத்திலமைந்த இப்பாடல் அற்புத ரஸத்தை வெளிக்கொணரும் வகையில் இவரால் பாடியாடப்படும்.

ராகம் : மாயாமாளவகௌள தாளம் : ரூபகம்

*பல்லவி*

நடன மாடினார் - ஐயா
நடன மாடினார் (நடனம்)

*அனுபல்லவி*

நடனமாடினார் தில்லைநாயகர் பொன்னம்பலந்தனில்
தாகுஜணுத தகஜம்தரி தகஜணு
தகதிமி தித்தோம் தத்தளாங்கு
தகதளாங்கு தகதிக ததிங்கிணதோமென்று
(நடனம்)

*சரணம்*

முத்தி மடத்தை சித்திக்க சித்திக்க
மோக வலைகள் பத்திக்க பத்திக்க
பத்தர்கள் மனது தித்திக்க தித்திக்க
பாதச் சிலம்பு சத்திக்க சத்திக்க
பனிமதி சடையாட பதஞ்சலிமாமுனி மறைபாட
பண்ணவர்கள் கொண்டாடப் பாலகிருஷ்ணன்
மத்தளம்போட ; (நடனம்)

## 9. சாந்தம் :

'சாந்தம்' எனும் ரஸத்தை ஒன்பதாவது ரஸமாகப் பிற்காலத்தில் வந்தவர்கள் சேர்த்துக் கொண்டனர். பரதர் எட்டு ரஸங்கள் பற்றியே கூறியுள்ளார். தொல்காப்பியரும் அவ்வாறே எணவகை மெய்ப்பாடுகளையே சொல்லியுள்ளார். விருப்பு வெறுப்பு இல்லாத சாந்த ரஸத்தில் பல உணர்ச்சிகள் தோன்ற வாய்ப்பில்லை. ஆகவே இதை ஒரு ரஸமாக ஏற்றுக் கொள்ளலாமா என்ற வினாவைச் சில அறிஞர்கள் எழுப்புகின்றனர்.

நாட்டில் சாஸ்திரத்துக்கு வரை வகுத்த அபிநவகுப்தா வேதாந்தக் கண்ணோட்டத்தோடு சாந்த ரஸத்தை நோக்கியுள்ளார். சாந்த ரஸம் ஆன்மீக அனுபவம் என்றும், உடல் உணர்ச்சிக்கு அப்பாற்பட்டதென்றும் இவர் கருதுகின்றார். (பத்மா சுப்பிரமணியம் 1986:141)

வைரமுத்துவும் நந்தனார் நாடகத்தில் 'சாந்த' ரஸத்தை இறுதிக் காட்சியில் மிகவும் அற்புதமாக வெளிப்படுத்துவார். தில்லைக் கூத்தனின் தரிசனத்தைக் கண்டு ஆடிப்பாடிய பின்னர் சாந்தமாக அசையாதிருக்கும் காட்சியினூடாக 'சாந்தரஸம்' பிறக்க வைக்கின்றார்.

இதுவரை நவரஸத்துடன் வைரமுத்துவின் நடிப்பை நோக்கினோம். இனிப் பொதுவாக அவர் நாடக அரங்கில் பாடலைக் கையாண்ட முறைமையைப் பார்ப்போம். *

*(தொடரும்)*

# ஆருயிரிற் கலந்தாய்!

## புலவர் வெற்றியழகன்

தமிழாகி நின்றாய் - உயிர்
தானாகி ஒன்றாய்!
அமிழ்தாகி வென்றாய் - என்றும்
அசையாத குன்றாய்! -தமிழாகி

தாயாக வந்தாய் - மொழிகளின்
தாயாய்உ வந்தாய்!
நோயாக வந்த - மொழிகளை
நொறுக்கியே நின்றாய்! -தமிழாகி

கனியாகக் கனிந்தாய் - அறிஞர்
கருத்துள்ளே படிந்தாய்!
தனியாகப் பிறந்தாய் - இந்தத்
தாரணியிற் சிறந்தாய்! -தமிழாகி

வானாக விரிந்தாய் - என்றன்
வாழ்வாக மலர்ந்தாய்!
தேனாக இனித்தாய் - நூல்கள்
தேட்டத்தால் களித்தாய்! -தமிழாகி

ஒளியாக நிலைத்தாய் - நெஞ்ச
உரமாகத் தழைத்தாய்!
வளியாகத் திகழ்ந்தாய் - என்றன்
மூச்சோடு கலந்தாய்! -தமிழாகி

முகிலாகப் பொழிந்தாய் கவி
மழையாக வழிந்தாய்!
அகிலாக மணந்தாய் - என்றன்
ஆருயிரிற் கலந்தாய்! -தமிழாகி